**செ. கு. எண்:090** **நாள்: 22.06.2017**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 22.6.2017</u>

சென்னை மாவட்டம், அயனாவரம் வட்டம், கொளத்தூர், யுனைடெட் காலனியைச் சேர்ந்த திரு அழகுதுரை என்பவரின் மகள் செல்வி கலையரசி என்பவர் 29.4.2017 அன்று வீட்டின் முதல் தளத்திற்கு சென்ற போது, எதிர்பாராதவிதமாக உயர் அழுத்த மின் கம்பியின் மின்சாரம் தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 1.5.2017 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் கள உதவியாளராக பணியாற்றிய, வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம், நாகநதி கிராமம், மேற்கு கொல்லை மேடுவைச் சேர்ந்த திரு ஜொல்ல மந்திரி என்பவரின் மகன் திரு துரை என்பவர் 7.6.2017 அன்று மின்மாற்றியில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், செனல்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு தங்கபாண்டியன் என்பவர் கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், காங்கேயம்பாளையம் கிராமத்தில் 7.6.2017 அன்று கட்டுமானப்பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், தமறாக்கி உள்வட்டம், முடிகண்டம் குரூப் மற்றும் கிராமத்தைச் சேர்ந்த திரு ஆறுமுகம் என்பவரின் மகன் திரு கோவிந்தன் என்பவர் 9.6.2017 அன்று மாடுகள் மேய்த்து கொண்டிருந்த போது, விவசாய நிலத்தில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், அயனாவரம் வட்டம், கொளத்தூர், காமராஜ் நகர் 2 வது தெருவைச் சேர்ந்த திரு பாஸ்கர் என்பவரின் மகன் திரு. கார்த்திக் என்பவர் 19.6.2017 அன்று தேங்கி இருந்த மழை நீரில் மின்சார கசிவு ஏற்பட்டு, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மின்சாரம் தாக்கி உயிரிழந்த செல்வி கலையரசி, திரு துரை, திரு. தங்கபாண்டியன், திரு. கோவிந்தன் மற்றும் செல்வன் கார்த்திக் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மேற்கண்ட ஐந்து நபர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**